# 25-12-2024 செய்தி

## முயன்றால் முடியும்!

- இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகத்தின் அடிப்படையில்தான் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை அளவிடப்படுகிறது.
- முழுமையான வர்த்தக சமநிலை (பாலன்ஸ் ஆஃப் ட்ரேட்) என்பது சர்வதேச வர்த்தகத்தில் இருப்பதில்லை.
- இறக்குமதியைவிட ஏற்றுமதியின் அளவு அதிகமானால் வர்த்தக உபரியும் (ட்ரேட் சர்ப்ளஸ்), ஏற்றுமதியை விட இறக்குமதியின் அளவு அதிகமானால் வர்த்தகப் பற்றாக்குறையும் (ட்ரேட் டெஃபிசிட்) ஏற்படும்.
- உலகில் ஏறத்தாழ 60 நாடுகள் மட்டுமே வர்த்தக உபரி பெற்ற நாடாக இருக்கின்றன. உலகிலேயே அதிகமான வர்த்தகப் பற்றாக்குறை உள்ள நாடாக அமெரிக்கா இருக்கிறது என்பதும், சீனா விரைவில் ஒரு லட்சம் கோடி டாலர் வர்த்தக உபரியை எட்டக்கூடும் என்பதும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கும் உண்மைகள்.
- அக்டோபர் மாதம் சுமார் 2,710 கோடி டாலராக இருந்த இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை, இதுவரையில் இல்லாத அளவில் 3,800 கோடி டாலரை நவம்பரில் எட்டியிருக்கிறது;
- இந்தியாவின் ஏற்றுமதிகள் குறைவதையும், இறக்குமதிகள் அதிகரிப்பதையும் உணர்த்தும் அளவுகோலாக நாம் இதைப் பார்க்க வேண்டும்.
- அக்டோபர் மாதம் சுமார் 3,900 கோடி டாலராக இருந்த ஏற்றுமதி, நவம்பர் மாதத்தில் 3,200 கோடி டாலராகக் குறைந்திருக்கிறது.
- அதே நேரத்தில், இறக்குமதிகள் 27% அதிகரித்து, நவம்பர் மாதத்தில் 6,995 கோடி டாலரை எட்டியிருக்கின்றன.
- வர்த்தகச் சமநிலையைக் கையாள்வதில் இந்தியா, எதிர்கொள்ளும் சவாலை இந்தப் புள்ளிவிவரம் வெளிப்படுத்துகிறது.
- இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை ஏப்ரல், அக்டோபர் மாத சராசரியைவிட கணிசமாக அதிகரித்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.
- இதே நிலை தொடருமானால், நிதியாண்டின் இறுதியில் எதிர் பார்த்ததைவிட வர்த்தகப் பற்றாக்குறை மிக அதிகமாகக் கூடும் என்கிற கவலை எழுகிறது.
- பெட்ரோலியம் அல்லாத பொருள்களின் ஏற்றுமதி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 7.75% அதிகரித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. அதனால், ஏற்றுமதியின் அளவு குறைந்திருக்கிறது என்பதை விட, மதிப்பு குறைந்திருக்கிறது என்று தெரிகிறது.
- மின்னணு சாதனங்கள், அரிசி, பொறியியல் தொடர்பான இயந்திரங்கள், உதிரிப் பொருள்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது.
- மின்னணு சாதனங்கள் 54%, பொறியியல் தொடர்பானவை 13.7% என நவம்பர் மாதத்தில் அதிகரித்து ஏற்றுமதியைக் கண்டிருக்கின்றன.
- வழக்கமான வைரம் உள்ளிட்ட நவரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி பின்னடைவைச் சந்தித்திருக்கிறது என்பதையும் பார்க்க முடிகிறது.
- ஏற்றுமதியைவிட, நமது இறக்குமதிகள்தான் அதிகக் கவலை தருவதாக இருக்கிறது. ஏப்ரல் - நவம்பர் இடைவெளியில் இறக்குமதிகள் 8.35% அதிகரித்தன என்றால், நவம்பரில் உச்சம் தொட்டு 7,000 கோடி டாலராக அதிகரித்திருக்கிறது.
- கச்சா எண்ணெய் இறக்குமதிதான் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்புக்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகத் தொடர்கிறது. நமது கட்டுப்பாட்டில் இல்லாத சர்வதேச விலை நிர்ணயம், நாணய மதிப்பு உள்ளிட்டவை கச்சா எண்ணெய் இறக்குமதிச் செலவைப் பாதிக்கின்றன.
- இந்தியாவின் இறக்குமதியில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது தங்கம், ஆபரண உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்டு, ஏற்றுமதி அதிகரித்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், சேமிப்பாகவும், தனிநபர் ஆபரணத் தேவைகளுக்காகவும்தான் கணிசமான அளவு தங்கம் இறக்குமதியாகிறது.
- 2023 ம் ஆண்டு நவம்பரில் 340 கோடி டாலராக இருந்த தங்கத்தின் இறக்குமதி, இந்த ஆண்டு நவம்பரில் சுமார் 1,500 கோடி டாலராக அதிகரித்திருக்கிறது.
- ஓரளவுக்கு ஆறுதலாக இருப்பது என்னவோ சேவைத் துறைதான். 2023ம் ஆண்டு நவம்பரில் 2,800 கோடி டாலராக இருந்த சேவைத்துறையின் பங்களிப்பு இந்த ஆண்டு நவம்பரில் 3,600 கோடி டாலராக அதிகரித்திருப்பது, இந்தியாவின் ஏற்றுமதிக்கு வலு சேர்த்திருக்கிறது.
- சேவைத் துறையின் ஏற்றுமதி, சரக்குகள் ஏற்றுமதியைவிட நவம்பர் மாதத்தில் அதிகமாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.
- உற்பத்திக்காக கச்சாப் பொருள்கள், உதிரி பாகங்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படுவதைத் தவிர்க்க முடியாது. அதன் மூலம்தான் நமது ஏற்றுமதியின் அளவை அதிகரிக்க முடியும்.
- அதிகரிக்கும் வர்த்தகப் பற்றாக்குறை என்பது வளர்ச்சி அடையும் நாடுகளில் தவிர்க்க முடியாதது என்பது ஓரளவுக்கு உண்மை.
- வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தால், செலாவணியின் மதிப்பு குறையும் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். பற்றாக்குறையை ஓரளவு சமாளித்து இந்திய ரிசர்வ் வங்கியில் கணிசமாக அந்நியச் செலாவணி கையிருப்பு இருக்கிறது என்றாலும், பற்றாக்குறை தொடர்ந்தால் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழப்பார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.
- சீனா, ஸ்விட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தகப் பற்றாக்குறை அளவு அதிகரித்த வண்ணம் இருப்பது நல்ல அறிகுறி அல்ல.
- இந்தியாவின் தயாரிப்புத் துறையை ஊக்குவித்து, ஏற்றுமதிகளை அதிகரித்து, இறக்குமதிகளையே நம்பி இருப்பதில் இருந்து விடுபடுவதன் மூலம்தான் பற்றாக்குறையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.
- மரபுசாரா எரிசக்தியின் பயன்பாட்டை அதிகரித்து கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பது; தங்கத்தின் பயன்பாட்டைக் குறைத்து அதன் இறக்குமதி அளவைக் கட்டுப்படுத்துவது;
- ஏற்றுமதிகள் சார்ந்த தொழில்களுக்கு ஊக்கமளிப்பது ஆகிய நடவடிக்கைகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படும்போது, வர்த்தகப் பற்றாக்குறை தானாகக் குறையத் தொடங்கும்.

## 5 மாநில ஆளுநர்கள் மாற்றம்

- கேரள ஆளுநர் ஆரிஃப் முகமது கான், பீகார் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பீகார் ஆளுநராக இருந்த ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேரள மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இரு சமூகத்தினரிடையேயான வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூர் மாநில ஆளுநராக அஜய்குமார் பல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.
- மிஸோரம் ஆளுநராக இருந்த ஹரி பாபு கம்பம்பட்டி, ஒடிஸா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். மிஸோரம் ஆளுநராக முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி வி.கே.சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.